செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 464 நாள்: 4/8/17

## பத்திரிக்கைசெய்திகுறிப்பு

### மணல் லாரிஉரிமையாளர்கள் கவனத்திற்கு

தமிழ்நாடு அரசின் மணல் இணைய சேவையில் (TN Sand) மேற்கொள்ளப்படும் வாகனப் பதிவுகளில் எழும் முறைகேடான பதிவுகளை தவிர்க்கும் பொருட்டு வாகன ஆவணங்களை சரிபார்த்தலுக்கான சிறப்பு முகாம் வேலூர் மாவட்டத்தில் 07.08.2017 முதல் 11.08.2017 வரையிலான நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை வட்டார போக்குவரத்து அலுவலர்களால் பொதுப்பணித் துறை அலுவலக வளாகம், காந்திநகர், காட்பாடி, வேலூர்.6 என்ற இடத்தில் நடத்தப்பெற உள்ளது. வாகன உரிமையாளர்கள் www.tnsand.in என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள படிவத்தில் தங்கள் வாகனத்தின் நடப்பிலுள்ள வாகன பதிவு புத்தகவிவரம் (RC Book), வாகன அனுமதிச் சான்று (Permit), வாகன தகுதிச்சான்று(FC), சாலைவரி ரசீது(Road Tax receipt) மற்றும் காப்பீடு விபரங்கள் (Insurance Details) ஆகியவற்றை இணையத்தில் பதிவேற்றம் செய்து, இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படும் படிவத்துடன் முகாமிற்கு வரவேண்டும். பதிவேற்றிய மேற்காணும் ஆவணங்களுக்கான அசல் சான்றுகளை அவற்றுக்கான நகல்களுடன் சிறப்பு முகாமில் காண்பித்து சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இம்முகாமானது வாகனத் தரவுகளை ஒழுங்குபடுத்த நடைபெறுகிறது. இம்முகாமிற்கு வாகனங்களை கொண்டு வரவேண்டாம். முகாமில் ஆவணங்கள் சரிபார்ப்பு மேற்கொள்ளும் வாகனங்கள் மட்டுமே இணையதள மணல் சேவையினை பயன்படுத்திக்கொள்ள முடியும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் தவறான ஆவணங்கள் கொண்ட வாகனங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4/8/17

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்-9.

4/8/17
செ.ம.தொ.அ.
வேலூர்-9.

4/8/17
884